**DEPOSITION OF WITNESS**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No. 123/2022**
**Prosecution Witness – PW 8**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. கிரிப்சன் ஜாண் |
| Father's Name | : | |
| Age | : | |
| Calling | : | |
| Village | : | |
| Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 02.12.2025.

A1 to A3, A5 to A10 present. A4 absent 355 BNSS petition filed and allowed.

முதல் விசாரணை–

நான் தற்போது ஜாண் கேஸ்ரோ மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிகிறேன். நான் 2011 ல் அக்டோபர் மாதம் குளச்சல் பினு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது பிரபாகரன் என்ற 42 வயது மதிக்க தக்க ஆண் ஒருவரை பரிசோதனை செய்தேன். அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன

1) வலது முன் கையில் 3x2x4 Cm ஆழமான ஒரு முறிவு காயம்

அவருக்கு Xray எடுத்ததில் வலது முன் கையில் எலும்பு முறிவு காணப்பட்டது, அவருக்கு முதலுதவி சிகிட்சை அளிக்கப்பட்டு மேல் சிகிட்சைக்காக திருச்சிக்கு சென்றார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயம் என்று நான் சான்று அளித்தேன். தற்போது என்னிடம் காட்டப்படுவது நான் வழங்கிய காயசான்று ஆகும். அது அ.சா.ஆ–2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது என்னிடம் காட்டப்படும் ( சா.பொ.1) கம்பால் தாக்கப்படும்போது மேற்படி காயம் ஏற்பட வாய்ப்புகள் உண்டு. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1 முதல் 10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

பிரபாகரனுக்கு நான் கொடுத்த காயசான்றிதழில், அவருக்கு ஏற்பட்டது Punctured Wound என்று தான் குறிப்பிட்டிருக்கிறேன் என்றால், சரிதான். Punctured Wound என்பது குத்து காயம் அல்லது, துளையிடும் காயம் என்று பொருள்படும் என்றால், சரிதான். கூர்மையான பொருட்களால் ஏற்படும் காயம் தான் Punctured Wound என்றால், எலும்பு முறிவு ஏற்படும்போது, எலும்பின் கூர்மையான பகுதி குத்துவதால் ஏற்படும் காயம் என்பதும் Punctured Wound தான். பொதுவாக சவுட்டு உருட்டு கம்பு கொண்டு அடிப்பதால் Punctured Wound ஏற்படாது என்றால், பொதுவாக ஏற்படாது ஆனால், எலும்பு முறிவு ஏற்பட்டு, எலும்பின் கூர்மையான பகுதி குத்துவதால் Punctured Wound ஏற்பட வாய்ப்புகள் உண்டு. பிரபாகரன் எங்கள் மருத்துவமனையில் 16.10.2011 ல் அனுமதிகப்பட்டார். 17.10.2011 ல் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார். காயம் பட்ட நபருக்கு Xray எடுக்கவில்லை என்றால், சரியல்ல. அவருக்கு Xray எடுக்காத காரணத்தினால் தான், நீதிமன்றத்தில் அந்த Xray யை தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. போலீசார் என்னை 16.10.2011 அன்று விசாரித்தார்கள். அதற்கு பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால், சரிதான். போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றாலும், அதனால் தான் போலீசார் அறிக்கையில் என்னுடைய பெயர் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. ஒருவர் கீழே விழுவதினால்எலும்பு முறிவு ஏற்பட்டு அதன் காரணமாக Punctured Wound ஏற்பட வாய்ப்புகள் உண்டு என்றால், சரிதான். எங்கள் மருத்துவமனையில் MLC Register பராமரிக்கப்படுகிறது. பிரபாகரனுக்கு வழங்கப்பட்ட சிகிட்சை MLC கேஸ்தான் என்றால், சரிதான். எனவே அவருக்கு கொடுக்கப்பட்ட மருத்துவ சிகிட்சை பற்றிய விபரங்கள் அந்த MLC Register இல் பதிவு செய்யப்பட்டிருக்கும் என்றால், சரிதான். MLC Register இல் பதிவு செய்யப்பட்டால், காவல் நிலையத்திற்கு தகவல் கொடுக்கப்பட்டு, அங்கிருந்து வந்து எங்களது MLC Register இல் கையொப்பம் செய்து அதன் நகலை பெற்று செல்வார்கள் என்றால், சரிதான். அந்த MLC Register இல் சம்பவம் நடந்த தேதி ,

மற்றும் சிகிட்சை சம்பந்தமான அனைத்து விபரங்களும் பதிவு செய்யப்படும் என்றால், சரிதான். அந்த MLC Register யை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். அதில் உள்ள விபரங்கள் தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள AR cum wound Certificate ல் உள்ளது. அந்த MLC Register யை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால், 14 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டதால் அதுபற்றி என்னால் உறுதியாக சொல்லமுடியாது. நான் குறிப்பிடுவதுபோல பிரபாகரனுக்கு சிகிட்சை அளிக்கவில்லை என்றாலும், நான் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**